

தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற அலுவலக கூட்டரங்கில் அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில் உயர்கல்வித் தரத்தினை மேலும் உயர்த்திடவும் உயர்கல்வியை மாணாக்கர்களுக்கு கொண்டு சேர்ப்பதை உறுதி செய்திடவும் உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் 13 பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் உள் தர உறுதிப்பிரிவு ஒருங்கிணைப்பாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு76, படவேட்டம்மன் கோயில் தெருவில், கட்டப்பட்டு வரும் மாநகராட்சி சென்னை உயர்நிலைப்பள்ளி கட்டடத்தின் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, தாயகம் கவி எம்.எல்.ஏ. உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

### எம்.பி.க்கள் வாரத்தில் 4 நாட்கள் தொகுதியில் தங்கி மக்களைச் சந்திக்க முதல்வர் அறிவுறுத்தல்!

# அனைத்துக் கட்சிகளும் இம்முறையைப் பின்பற்றினால் தமிழக மக்களின் குறைகள் தீரும்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, அக். 15 -

“தமிழ்நாட்டு எம்.பி.க்கள் வாரத்தில் 4 நாட்கள் தொகுதியில் தங்கி மக்களைச் சந்திக்க வேண்டும் என்ற முதல்வரின் அறிவுறுத்தலை அனைத்துக் கட்சிகளும் பின்பற்றினால் தமிழக மக்களின் குறைகள் தீரும்” என்று ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து 14.10.2025 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

2,500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சீன தத்துவ மேதை லாவோ சூ, உதிர்த்த எண்ணற்ற தத்துவங்கள் இன்றும் எல்லா நாடுகளிலும் பல மேற்கோள்களுக்கு சுட்டிக் காட்டப்படுகின்றன.

மறைந்த அண்ணா அவரது எழுத்துக்கள் மீது அதிக ஈர்ப்பு கொண்டவர். அவர் சொன்ன ஒரு தத்துவம் அன்று மட்டுமல்ல, இன்றும், என்றும் அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் மட்டுமல்லாமல் பொது சேவையில் உள்ள அனைவரும் பின்பற்றக் கூடிய வகையில் பாடங்களை கற்றுக்கொடுப்பதாக இருக்கிறது. அன்று அவர் சொன்னது, “மக்களிடம் செல், அவர்களுடன் வாழ். அவர்களிடம் இருந்து கற்றுக் கொள். அவர்களை நேசி. அவர்கள் அறிந்தவற்றில் இருந்து தொடங்கு. அவர்களிடம் உள்ளவற்றைக் கொண்டு கட்டமை”.

இந்த வாசகங்களைத் தான் அண்ணா, தி.மு.க.வில் உள்ள தன் தம்பிகள் மக்கள் பணியில் சிறக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் அடிக்கடி குறிப்பிடுவார். அதனை இப்போது முதல் - அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும் கையில் எடுத்துள்ளார். மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் மக்களோடு இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில் சில திட்டங்களை வகுத்துக் கொடுத்துள்ளார். ஏற்கனவே அமைச்சர்கள் வேலை நாட்களில் மட்டும் தலைமைச்செயலகத்தில் இருந்து தங்கள் பணிகளை கவனித்துவிட்டு வார இறுதி நாட்களில் தங்கள் தொகுதிக்கும், மாவட்டங்களுக்கும் சென்று மக்கள் பணி ஆற்றவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவுக்கு பிறகு அமைச்சர்களை வார இறுதியில் சென்னையில் பார்க்கமுடியவில்லை. தங்கள் மாவட்டங்களிலேயே சுற்றுப்பயணம் சென்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

அடுத்து முதலமைச்சருடைய பார்வை இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது விழுந்துவிட்டது. சமீபத்தில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்டி பல



தலையங்கம்

தினத்தந்தி

14.10.2025 (செவ்வாய்க்கிழமை)

மக்களிடம் செல்லுங்கள்



ஆலோசனைகளை வழங்கினார். அப்போது அவர், நாடாளுமன்றம் நடைபெறும் நாட்களைத் தவிர்த்து குறைந்தது வாரத்தில் 4 நாட்கள் தங்கள் தொகுதியில் தங்கி மக்களைச் சந்தித்து, அவர்களுக்குத் தேவையான பணிகளை செய்யவேண்டும் என்றும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் தொகுதியில் ஆற்றிய மக்கள் பணிகள், நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டு மக்களின் நலனை காத்திடும் வகையில் எடுத்துரைத்த கருத்துக்கள் ஆகியவை பற்றிய அறிக்கையை 15 நாட்களுக்கு ஒருமுறை தனக்கு அளித்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

ஆக தமிழ்நாட்டில் தி.மு.க. எம்.பி.க்களை தொகுதியில் உள்ள மக்கள் இனி வாரத்துக்கு 4 நாட்கள் சந்தித்து தங்கள் குறைகளை சொல்லமுடியும். இனி தொகுதி மக்கள் தங்களுடைய எம்.பி.க்களை எந்த கஷ்டமும் இன்றி எளிதாக சந்திக்கலாம். நாடாளுமன்றத்தில் தமிழக மக்கள் நலன் குறித்து பேசிய விவரங்களையும், முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டு இருப்பதால் அவருக்கு அனுப்பும் அறிக்கையில் சொல்லவேண்டும் என்பதற்காகவும், இனி நாடாளுமன்றத்தில் நிச்சயம் கேள்விகளை கேட்க வேண்டும். விவாதங்களில் பங்கு கொள்ள வேண்டும் என்ற கட்டாயத்துக்கு எம்.பி.க்கள் ஆளாகியுள்ளனர். இதேமுறையை அனைத்துக் கட்சிகளும் பின்பற்றினால் தமிழக மக்களின் குறைகளெல்லாம் நிறைவாகும்.

இதேபோல அனைத்து தொகுதிகளிலும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக இப்போது ஒன்றிய அரசாங்கம் ஆண்டுக்கு ரூ.5 கோடி வழங்குவதை ரூ.10 கோடியாக உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையையும் வலியுறுத்தியுள்ளார். தமிழக அரசு எம்.எல்.ஏ.க்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதியாக ரூ.3 கோடி வழங்கும் நிலையில் 6 சட்டமன்றத் தொகுதிகளைக்கொண்ட ஒரு எம்.பி. தொகுதிக்கு ரூ.10 கோடி வழங்கவேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதுதான்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ்

# சி.எம்.டி.ஏ. சென்னை மாநகராட்சி சார்பில் பல்வேறு பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு!

சென்னை,அக்.15-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று (13.10.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில், சென்னை, தீவுத்திடலில் கட்டப்பட்டு வரும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையம், அதனைத் தொடர்ந்து திரு.வி.க. நகர் தொகுதி, பெரம்பூர், சந்திர யோகி சமாதி சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடம், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், படவேட்டம்மன் கோயில் தெருவில் கட்டப்பட்டு வரும் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் செல்லப்பா தெருவில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் முன்னேற்றப் பணிகளை துரிதபடுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், சிஎம்டிஏ முதன்மைச் செயல் அலுவலர் சிவஞானம், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர்கள் திருமதி.சரிதா ம கே ஷ் கு மா ர், பி.ஸ்ரீராமுலு, சிஎம்டிஏ கண்காணிப்பு பொறியாளர் ராஜன்பாபு, உதவி செயற் பொறியாளர் முனைவர் அ.காந்திமதி, மாநகராட்சி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

இ. பொ. து. ந. க. எண். எம்1/2248/2025

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் குறுகியகால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

**ஒரு எண்ணிக்கையிலான வாகனத்தின் மீது பொருத்தப்பட்ட High Pressure Suction Cum Jetting Machine With Recycling Facility (10 KL Capacity) உபகரணத்தினை அக்டோபர் முதல் டிசம்பர் வரை உள்ள மழைக்காலத்தில் 75 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் பணி.**

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : **24.10.2025** பிற்பகல் **3.00**, மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **24.10.2025** பிற்பகல் **4.30** மணி

மேலும் விவரங்களுக்கு: **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/5640/ஒப்பந்தப்புள்ளி/2025 **கண்காணிப்பு பொறியாளர் (இ)**




சிலம்பம் சென்னை மாவட்ட சங்கமும் சேத்துப்பட்டு யூத் வெல்ஃபேர் அசோசியேஷனும் இணைந்து எழும்பூர் செயிண்ட் பால்ஸ் மேல்நிலைப்பள்ளியில் நடத்திய ஆடவர் மற்றும் மகளிருக்கான சிலம்பம் போட்டி பரிசளிப்பு விழாவில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, அப்போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர் மற்றும் வீராங்கனைகளுக்குப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 237வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,அக்.15-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 237 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (14.10.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: ஆச்சாரப்பன் தெரு, தாதா முத்தியப்பன் தெரு சந்திப்பு. 2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54, தங்கசாலை தெரு (அரசு அச்சகம் அருகில்), சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்



களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதி மொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இசட். ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச் செல்வி, பி.விஜயகுமார், எல். சம்பத்குமார், பா.பிரதாப் குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ்

துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம். ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர். இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### புழல் எம்.நாராயணன் முன்னிலையில்! மாதவரம் வடக்கு பகுதி திமுக தீர்மானம்!

# 2026 தேர்தலில் முதல்வராக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினை மீண்டும் அரியணை ஏற்றுவோம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்!

மாதவரம், அக்.15-

சென்னை வடகிழக்கு மாவட்டம்,மாதவரம் வடக்கு பகுதி திமுக ஆலோசனை கூட்டத்தில் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளுடன் மீண்டும் இரண்டாவது முறையாக தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை அரியணை ஏற்ற அயராவது பாடுபடுவோம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள், பாக இளைஞர்கள், பாகத் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் 19வது வட்டம் மாத்தூர் இரண்டாவது பிரதான சாலையில் உள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 2026 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 200 தொகுதிகளுடன் மீண்டும் இரண்டாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக தளபதி அவர்களை அரியணை ஏற்ற அயராது பாடுபடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திராவிட மாடல் ஆட்சியில் எண்ணற்ற சாதனைகளை ஏழை எளியோர், விவசாய பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள் மாணவர்கள், மகளிர் என அனைத்து தரப்பினரும் பயன்பெற்று வரும் தமிழ்நாடு முதலமைச்சரின் சாதனைகளை வீடு வீடாக துண்டு பிரசுரங்கள் மூலம் வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகளை நீக்கும் வகையில் பாகங்கள் தோறும் உள்ள பாக ஒருங்கிணைப்பாளர்கள் சம்பந்தப்பட்ட பாக முகவர்கள் துணையுடன் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்த்து இன்னும் ஐந்து நாட்களுக்குள் பட்டியலை மாவட்ட கழகத்திலும் ஒப்படைப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக வட்டங்கள், பாகங்கள் தோறும் இளைஞரணிக்கு நிர்வாகிகளை நியமனம் செய்த தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆலோசனைக் கூட்டத்திற்கு வருகை தந்தவர்களை வட்டச் செயலாளர்கள் 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன், 15வது வட்டச் செயலாளர் கே. அங்குசாமி, 23 வது வட்ட செயலாளர் பி.எஸ்.சந்துரு, 23 அ வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் ஆகியோர் வரவேற்றார்கள்.

மாவட்ட துணைச் செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் என். பரந்தாமன், மாதவரம் வடக்குபகுதி கழக நிர்வாகிகள் கே. சிவசங்கரன், கவுன்சிலர்கள் க. காசிநாதன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு,ஆ. ராஜேந்திரன், ஆர். முரளி, கௌரிசங்கர்லால், நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன், பி.நிர்மல் குமார், தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ் உதயகுமார்,மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எஸ். கோபாலகிருஷ்ணன், துரை தசரதன், பி. துரைசாமி, எஸ். சிவக்குமார், கே. சண்முகப்பிரியன்,இ.எம். மனோகரன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் எம். அமுதா, எஸ். கலைச்செல்வி, ஆர். சுதா, எஸ். சுதா, காஞ்சனா மோகன்,பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ர.விஜய் ஆனந்த், வழக்கறிஞர் எம். என். அஜய் தென்னவன், ஜி. ராஜேஷ் கண்ணன், எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், ஏ.விஜயன், பகுதி மகளிர் அணி நிர்வாகிகள் சுகாசினி, அபிதா முகமது அலி, ஜெயபாரதி, சரஸ்வதி அத்திகுளம் தேவி, பெரியநாயகி, கஸ்தூரி, சாந்தி, பார்கவி, ராஜேஸ்வரி, சகிலா,

வட்டக் கழக நிர்வாகிகள் 19 ஆவது வட்டம் வழக்கறிஞர் திருமலை, துளசி, ரகுவரன், வினோத், தமிழரசன், மலர்மன்னன் நாகராஜ் தாரணி பிரவீன் குமார் சாந்த குமார், சுந்தரி, நெடுஞ்செழியன், கலைச்செல்வி, செல்வராஜ், அஜித், ஜானகிராமன், கங்காதரன்,

15 ஆவது வட்ட நிர்வாகிகள் பக்தவச்சலம், எல்லமுத்து, பாலாஜி, முருகன், வக்கீல் டில்லிபாபு, வக்கீல் சண்முகம், சீனிவாசன், ராஜேந்திரன், தேவராஜ், தசரதன், புஷ்பராஜ், சாய், ஸ்ரீதர் ஸ்ரீநாத், ராஜேஷ், தினேஷ், கண்ணன், மாத்தூர் கே.குமார், சிவப்பிரகாசம், காசி,

17 வது வட்டம் சி. மூர்த்தி, எஸ். பாலாஜி,வி பார்த்தசாரதி, கே. ராஜா, டி. திவாகர், கே. சண்முகபிரியன், வீ. சுமீர், ஜி. முனிவேல்,ஜி. கார்த்திக், எம் மைக்கேல், விஷ்ணு, எம். என் தளபதி, பி. செந்தில்,இ. கார்த்திக், ஜான்சன், பூபாலன், கமலநாதன், கீர்த்தி, சஞ்சய் தீயம்பாக்கம் ஜோசப்,

16வது வட்ட நிர்வாகிகள் அருள், வெங்கடேசன், ரமேஷ், முத்தையா, புவனேஸ்வரி மகேஷ்குமார், செமின் எடிசன், வக்கீல் சுரேந்தர், கிருபாகரன், தரணி, குமார், செபின் மெடிசன், நித்தியானந்தம், சரண், நைனியப்பன், ராஜி, ஹேமந்த்,

23வது வட்ட நிர்வாகிகள் து.எழில் குமார், மு விக்னேஸ்வரன், டி.ராஜாராம், சொ. சரவணன், வே. ரவி, க.ந.க. சைமன், எஸ். முத்துவேல், நாகையன், மஞ்சுளா, ராஜா, குழந்தைசாமி, தங்கவேல், நடராஜன், முத்துக்குமார், ஷேக் முகமது, ஜே. கே. ஹரி, மோகன், உதயகுமார், ஜெகநாதன்

23 அ வட்டம் உசேன் மைதீன், பார்பன், முத்து கிருஷ்ணன், வி. ஹரி, சுதாகர், லாரன்ஸ், காவாங்கரை ஜவகர், எம்.பாஸ்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்

கூட்டத்தின் முடிவில் கலந்து கொண்ட கழக முன்னோடிகள் அனைவருக்கும் அறுசுவை அசைவ பிரியாணி, காடை வறுவல் உள்ளிட்ட உணவு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.






மாதவரம் வடக்கு பகுதி திமுக பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாகமுகவர்கள் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் மாத்தூர் 19 ஆவது வட்டம் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். கூட்டத்தில் அறிவழகி பாலகிருஷ்ணன், என்.பரந்தாமன், வட்ட செயலாளர்கள் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் கே. அங்குசாமி, பி. எஸ். சந்துரு, வி .ஆர். குப்பன், மஞ்சம்பாக்கம் பாபு, பகுதி நிர்வாகிகள் கே.சிவசங்கரன், க.காசிநாதன், ஆ. ராஜேந்திரன், ஆர். முரளி, கௌரிசங்கர்லால், நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன், பி. நிர்மல் குமார் மற்றும் மாவட்ட, பகுதி,வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.